## திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்,

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை!



திருச்சி, ஜூலை 31 -

திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கை வருமாறு:

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில், கழக இளைஞரணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று (31/07/2024-புதன்கிழமை) மதியம் 02.00 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலமாக திருச்சி விமான நிலையத்திற்கு வருகை தர வுள்ளார்கள் அவரை வரவேற்க மாநிலமாவட்ட மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் கழக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி!

# மேட்டூர் கிழக்கு - மேற்கு கால்வாயில் தண்ணீர் திறப்பு!

### சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.ராஜேந்திரன் அறிக்கை!



சேலம், ஜூலை 31 -

மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாயில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட உத்தரவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விவசாயிகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துகொள்வதாக. சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேட்டூர் அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய்களில் பாசனத்திற்காக நீர் திறந்து விட சேலம் நாடாளுமன்ற உறுப்பினர். TM செல்வகணபதியிடம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினரிடமும் சங்கங்களை சார்ந்தவர்களும் விவசாய பெருமக்களும் நேரில் வந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று அதனை பரிசீலித்த முதலமைச்சர் அவர்களும் மேட்டூர் கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய்களில் பாசனத்திற்கு நீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளார்கள். பாசனத்திற்கு நேற்று 30.07.2024 - செவ்வாய்க் கிழமை நீர் திறந்துவிட உத்தரவிட்ட முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு விவசாய சங்கங்கள், விவசாய பெருமக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு தலைமையில்

# திருச்சி வருகை தரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### திருச்சி மத்திய - க.வைரமணி, வடக்கு - ந.தியாகராஜன் எம்.எல்.ஏ. அறிக்கை!

திருச்சி, ஜூலை 31 -

திருச்சி மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் க.வைரமணி, வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ந.தியாகராஜன் MLA ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தி.மு.கழக இளைஞர் அணி செயலாளரும், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சி, துறையூர் பகுதிகளில் நடைபெறவிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இன்று (31.07.2024 - புதன்கிழமை) மதியம் சுமார் 1.00 மணியளவில் விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தரவிருகின்றார். அப்பொழுது விமான நிலையத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அவர்களின் தலைமையில் மத்திய மற்றும் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சிகளில் திருச்சி மத்திய, வடக்கு மாவட்ட, மாநகர, அனைத்து ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் அனைவரும் தவறாது விமான நிலையத்திற்கு வருகை தந்து உற்சாக வரவேற்பு அளித்திட வேண்டுகிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயனின் சகோதரி

# யமுனா அம்மையார் இறுதி ஊர்வலம்!

### கழக நிர்வாகிகள் அஞ்சலி!

தஞ்சாவூர், ஜூலை 31 -

கழக விவசாய அணி செயலாளரும் , தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ.கே.எஸ். விஜயன் அவர்களின் அன்பு சகோதரி யமுனா அம்மையார் உடல்நலம் குறைவால் மறைவெய்தினார் .தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் தனது இரங்கலை தெரிவித்திருந்த நிலையில் , பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி .தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த யமுனா அம்மையார் அவர்களின் உடல் தஞ்சை மருத்துவக் கல்லூரி சாலையில் உள்ள ஈஸ்வரி நகரில் அவரது இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டு, இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் நிவேதா முருகன், துரை.சந்திரசேகர், முருகேசன் , வெங்கடேஷ், முத்துராஜா, கே.ஜி.நீலமேகம், கே.மாரிமுத்து, ஆளூர் ஷாநவாஸ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் நா.இளையராஜா .

திருவாரூர் மாவட்ட ஊராட்சி தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தஞ்சை மேயர் சண்.ராமநாதன், துணை மேயர் டாக்டர்அஞ்சுகம் பூபதி, பொதுக்குழு உறுப்பினர் எல்.இ.எஸ். பழனியப்பன், வேளாங்கண்ணி எஸ். பி.டி.சார்லஸ், திட்டச்சேரி ரவி, கீழ்வேளூர் ஒன்றியக் குழு தலைவர் வாசுகி நாகராஜன் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.ராஜமாணிக்கம், நிஜாமுதீன், கே.பழனிச்சாமி, வை.சிவபுண்ணியம், உலகநாதன், எம்.ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி.

ஒன்றியக்குழு துணை தலைவர் ஆர்.பாலச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் எம்.எஸ்.கார்த்திக் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.எஸ். பாண்டியன், ப.ஆடலரசன், நகர செயலாளர்கள் வீரா.கணேசன், சீர்காழி சுப்பராயன், அவைத்தலைவர் க.தன்ராஜ், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றியக்குழு தலைவர் அ.பாஸ்கர்.

ஒன்றிய செயலாளர்கள் மயிலாடுதுறை வடக்கு என்.இளையபெருமாள், முத்துப்பேட்டை மனோகரன், சித்தேரி சிவா, ஒரத்தநாடு கார்த்தி, பால.ஞானவேல், வீ.எஸ்.ஆர். தேவதாஸ், வேளாங்கண்ணி எடிசன், ஆர்.டி. சரவணன், வடலூர். ராஜேந்திரன், மூவாலூர் மூர்த்தி.

மாநில விவசாய அணி துணை செயலாளர் அருள் செல்வன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் இரா. சங்கர், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் , கள்ளிப் பட்டி மணி, செம்பனார்கோயில் ஸ்ரீதர், அயலக அணி அமைப்பாளர் ஆர். வி. ஆனந்த், திருவாரூர் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ரமேஷ், இல.மேகநாதன் , வேளாங்கண்ணி சார்லி, அக்கரைப் பேட்டை மனோகர், தமிழ்நாடு விவசாய சங்க தலைவர் பி.ஆர்.பாண்டியன். மற்றும் நாகை, திருவாரூர் மற்றும் தஞ்சை மாவட்டங்களை சேர்ந்த கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர் கழக நிர்வாகிகளும் , கழக தோழர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர். அம்மையாரின் இறுதி ஊர்வலம் நடைபெற்று சனிக்கிழமை தஞ்சையில் உடல் தகனம் செய்யப்பட்டது.



தஞ்சாவூர் தெற்கு மாவட்டம், பட்டுக்கோட்டை தலைமை தபால் நிலையம் எதிரே ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தஞ்சை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் நா.அசோக்குமார், பட்டுக்கோட்டை நகர செயலாளர் எஸ்.ஆர்.என்.செந்தில்குமார், ஒன்றிய செயலாளர்கள் முருகானந்தம், ஏனாதி ராமநாதன், வடக்கு ஒன்றிய செயலாளர் பார்த்திபன், இளங்கோ, லண்டன் கோவிந்தராஜ், இராம.குணசேகரன், எஸ்.ஹெச்.அஸ்லாம், அன்பழகன், இளங்கோவன், முத்துமாணிக்கம், ரவிச்சந்திரன் மற்றும் தி.மு.க. சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கட்டிடங்கள் : முதல்வர் திறந்து வைத்தார் !

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 391 வாகனங்களை வழங்குதல்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2023-24 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கள அலுவலர்கள், செயல்படுத்தப்படும் பணிகளின் தரத்தை கண்காணிக்கவும் உரிய காலத்தில் முடித்திடு வதை உறுதி செய்யவும் கள ஆய்வு மேற்கொள்ளவும், இப்பணிகளை திறம்பட கண்காணிக்க ஏதுவாகவும் புதிய வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 35 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 391 வாகனங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர்கள், செயற் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள், உதவி செயற் பொறியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்களின் பயன்பாட்டிற்காக வழங்கிடும் வகையில், அவ்வாகனங்களுக்கான சேவையினை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்து, வாகனங்களுக்கான சாவிகளை அலுவலர்களிடம் வழங்கினார்.

**கழக ஆட்சியில் 725 புதிய வாகனங்கள்!**

கழக அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 83 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 725 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




நீலகிரி மாவட்டம், உதகை ஊராட்சி ஒன்றியம், தொட்டபெட்டா ஊராட்சி, ஓடைக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 29.07.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா சீருடைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வே. தங்கபாண்டியன்

### ஜூலை 31 (1997)



**தென்பாண்டி மண்டலத்தில் கழகத்தை வளர்த்த முக்கிய தளகர்த்தர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளராக தொடர்ந்து 23 ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். நெருக்கடி நிலையின்போது ஓராண்டு மிசா கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**இருமுறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருமுறை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், கலைஞர் அமைச்சரவையில் 1996ஆம் ஆண்டு கூட்டுறவு – வணிகவரித்துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**காரியாப்பட்டி ஒன்றியப் பெருந்தலைவர், மல்லாங்கிணறு பேரூராட்சித் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**“மாவட்டச் செயலாளர் பணியில் வீரமிகு பாண்டியனாகவும், அமைச்சர் பொறுப்பில் பத்தரை மாற்றுத் தங்கமாகவும் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி. கிருஷ்ணன்

### ஜூலை 31 (2011)



**இராயபுரம் ‘ராபின்சன்’ பூங்காவில் 1949–ல் கழகம் துவக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று முதல் கழகப் பணியாற்றி வந்தவர்.**

**இராயபுரம் பகுதியில் வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.**

**துறைமுகத் தொழிலாளியான இவர், தொ.மு.ச.பேரவையின் கீழ் இயங்கும் ‘துறைமுக தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதோடு, தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**